அனுமந்தன்பட்டி பேரூராட்சி செயல் அலுவரைது நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் திரு.தி.சீனிவாசன்

ந.க.எண். 180/2025 நாள். 13.11.2025

பொருள்: மனைப்பிரிவு - தேனி மாவட்டம் அனுமந்தன்பட்டி பேரூராட்சி அனுமந்தன்பட்டி வருவாய் கிராமம் நில அளவை எண்கள். 437/2A2B. 437/2B2. 437/2C2. 440/1. 457/1B மற்றும் 458 இல் 15375.00 சமீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை: 1)இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர். நகர் ஊரமைப்புத் துறை, தேனி அவர்களின் தொழில் நுட்ப அனுமதி ந.க.எண், L.P/AD DTCP (TD) NO. SWP/134/2025 . நாள்.24.07.2025.

2)திரு.மா.சசிக்குமார், கதவு எண்.48/A வீரபாண்டி பேரூராட்சி மெயின் ரோடு, தேனி மாவட்டம் என்பவரது மனு நாள். 25.07.2025 .

3) உத்தமபாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திரப் பதிவு எண். 1158/2024, நாள்.07.07.2024.

4) அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை , நாள் 04.05.2017.

5) அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை . நாள் 04.02.2019

6) அரசாணை எண். 16 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 31012020.

7)அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 23.09.2020.

8) அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.08.12.2020.

9) அரசாணை எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.22.06.2017.

10) திரு.மா.சசிக்குமார், கதவு எண்.48/A வீரபாண்டி பேரூராட்சி மெயின் ரோடு, தேனி மாவட்டம் என்பவரது ஒப்புதல் கடிதம் நாள். 25.07.2025.

11) தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை:

தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1 இல் காணும்தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில், தேனி மாவட்டம், அனுமந்தன்பட்டி பேரூராட்சி, அனுமந்தன்பட்டி வருவாய் கிராமம் சர்வே எண். 437/2A2B. 437/2B2. 437/2C2. 440/1. 457/1B மற்றும் 458 இல் 15375.00 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில்அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை 2 இல் காணும் மனுதாரரான திரு.மா. சசிக்குமார் என்பவரது விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக நிபந்தனைகளுக்குட்பட்டு L.P/AD DTCP (TD) NO. SWP/113/2025 என எண்ணிடப்பட்டு மனைகளுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.மா.சசிக்குமார் என்பவரது பார்வை 3இல் காணும் கிரையப்பத்திரத்தின்படி, உத்தமபாளையம் சார்பதிவாளர் பத்திரப்பதிவு அலுவலக ஆவண எண். 1158/2024 நாள்.07.07.2025 இன்படி பாதைக்கான இடத்தினை மேதகு தமிழ்நாடு ஆளுநர்அவர்களது பெயரில் பதிவு செய்யப்பட்டு பத்திர பதிவு ஆவண எண் 1438/2025 நாள்:24.07.2025 இன்படி மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் அரசாணைகள் 4, 5, 6, 7, 8 மற்றும் 9 இன்படி மனையிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், அரசாணை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017 இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத் தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	கட்டண விவரம்	தொகை	செலுத்தும் சீட்டு எண்/சலான் மற்றும் நாள்
1	விளம்பர பலகை காட்சி கட்டணம்	15,000	47/2025-2026 நாள்: 12.11.2025
2	ஆய்வுக் கட்டணம்	2000	
2	நிலப்பயன்பாட்டு மாற்றக் கட்டணம் ஏக்கருக்கு ரூ290000/- வீதம் 3,80 ஏக்கருக்கு தொகை ரூ 383000 இக்கு 3 சதவீதம் (சார்நிலை கருவுலத்தில் செலுத்திட வேண்டும்)	43662	
3	மனைப்பிரிவு முறைப்படுத்துதல் கட்டணம் பிளாட் 1க்கு 1000 வீதம் 70 பிளாட்டுக்கு	70,000	
4	டேவணித்தொகை 1 ஏக்கருக்கு 100000 வீதம் 2.23க்கு ரூ	3,80,000	
	மொத்தம்	510,665	

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், இணையதளம் மூலமாக (Transaction ID No: ICIN22025111220982576/NDPS 11) வசூல் செய்யப்பட்டுள்ளது. அனுமந்தன்பட்டி பேரூராட்சி அனுமந்தன்பட்டி வருவாய் கிராம சர்வே எண். 437/2A2B. 437/2B2. 437/2C2. 440/1. 457/1B மற்றும் 458 இல் 15375.00 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு, தேனி நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி L.P/AD DTCP (TD) NO. SWP/113/2025 என எண்ணிடப்பட்டு 70 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது. மேலும்,

மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிட வரி வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேலும் முறைப்படுத்துதல் கட்டணம் வசூலித்தது குறைவு என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலோ/ அரசாலோ/ந.ஊது/ மூலம் தெரிவிக்கப்பட்டு மீள கூடுதல் கட்டணம் வசூலிக்கத் தெரிவித்தால் அவற்றை பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்த 7 தினங்களுக்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முறைப்படுத்தப்படுகிறது.

13/11/25

செயல் அலுவலர்
அனுமந்தன்பட்டி பேரூராட்சி
தேனி மாவட்டம்.

13.11.25

இணைப்பு: மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்

திரு.மா.சசிக்குமார்
கதவு எண்.48A மெயின் ரோடு.
வீரபாண்டி
தேனி மாவட்டம்.

நகல்

1) தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2) தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3) உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4) சார்பதிவாளர், உத்தமபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது